# பரத்திலிருந்து கொடுக்கப்படாவிட்டால்




**லூக்19:11 "இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்."**

மேற்கண்ட வசனம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிலாத்துவை நோக்கி கூறியதாகவும். இப்படிக் கூற காரணம் இதற்கு முந்தைய வசனத்தில், **லூக் 19:10 இல் "அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்."** இங்கு பிலாத்து அன்றைய ரோம சக்கரவர்த்தியான சீசரிடம் இருந்து தனக்கு கிடைத்த அதிகாரத்தினால் தான் எதையும் செய்ய முடியும் என்று நினைத்து இவ்வாறு பேசினான். ஆனால் உண்மையில் நடக்கும் காரியங்கள் ரோம சக்கரவர்த்தியின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடவாமல், தேவ சித்தத்தின்படி நடக்கின்றது என்றும், பிலாத்து ஆண்டவரை விசாரணை செய்து எடுக்க போகின்ற முடிவு பரலோக தேவனின் கட்டளையின்படி நடக்கிறது என்பதை அறிந்திருந்த ஆண்டவர் அதை பிலாத்துவிற்கு கூறினார். ஆனால் அதை உணர்ந்து கொள்ள கூடிய அறிவு பிலாத்துவிற்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் இல்லாதிருந்தது.

ஆண்டவரை அநியாயமாய் காட்டிக்கொடுத்து பிடித்துவந்து பிலாத்துவிடம், ஏரோதுவிடமும் ஒப்படைத்து ஆண்டவரை மரண தண்டனைக்கு உள்ளாக தீர்க்க நினைப்பது ஏதோ தங்கள் தந்திரத்தினால், அதிகாரத்தினால், தாங்கள் செய்வதாக எண்ணினர். ஆனால் இவையாவும் தேவ முன்னறிவிப்பின்படியே நடந்தேறியது. காரணம் தேவனுடைய மகத்துவமான மீட்பின் திட்டம். ஆனால் அதுவோ அற்ப மனிதர்கள் ஒருவருக்கும் விளங்கவில்லை. இதைப் போலவே, இப்பொழுதும் தேவ பிள்ளைகள் மேல் பலர் அதிகாரம் செலுத்த நினைக்கின்றனர். சிலர் அரசியல் அதிகாரத்தின் மூலமும், சிலர் பணபலம், ஆள்பலம் மூலமும், இன்னும் சிலர் வேலை

ஸ்தலத்தில், சொந்த குடும்பத்தில் கூட தேவ பிள்ளைகளாகிய நம் மேல் அதிகாரம் செலுத்த நினைக்கின்றனர். ஆனால் நம்மில் அதிகாரம் உடையவர் தேவன் மட்டுமே.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னது போல் அவரால் அனுமதிக்கப்பட்ட அளவை தாண்டி யாரும் நம் வாழ்வில் அதிகாரம் செலுத்த முடியாது. ஆனால் அதே நேரத்தில் ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிற அதிகாரத்தினால் நம்மால் ஊழியம் செய்ய முடிகின்றது. கடிந்துகொண்டு, கண்டனம் பண்ணி புத்தி சொல்ல நமக்கு அதிகாரம் உண்டு. **"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." (யாக் 1:17).** நம் வாழ்வில் நடைபெறுகின்ற அனைத்தும் அது நன்மையானாலும், நன்மை உண்டாகும்படி சிலகாலம் உண்டாகிற சோதனையானாலும், அவை யாவும் பரலோகத்திலிருந்து நமக்கு கொடுக்கப்படுகின்றது அல்லது அனுமதிக்கப்படுகின்றது.

யோபுவின் வாழ்விலும் நடந்தது இது தான். மற்றவர்கள் யோபுவின் துன்பத்திற்கு பல காரணங்கள் கூறினாலும், அவர் கூறியது ஒன்றுதான் **கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்** என்பது தான். அவர் தன் மீதோ, மற்றவர் மீதோ, ஏன் பிசாசின் மீது கூட காரணம் கூறவில்லை. தான் முழுமையாக தேவ அதிகாரத்திற்கு உட்பட்டவர் எனவே தனக்கு நேரிடும், அனுமதிக்கப்படும் அனைத்தும் தேவனை தாண்டி வர முடியாது என்பதை நன்கு அறிந்திருந்தார். எனவே தான் மற்றவர்கள் என்ன கூறினாலும், சொந்த மனைவியே தன்னோடு கூட எல்லா நன்மைகளையும் அனுபவித்தவளே, **தேவனை தூஷித்து ஜீவனை விடும்** என்று கூறியபோதும், அவர் அமைதியாக இருந்தார். பிலாத்து ஆண்டவரை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தது போல் தோன்றினாலும் மூன்றாம் நாள் அவர் உயிரோடுடெழுந்ததை அவனால் தடுக்க முடியவில்லை. யோபுவை இரண்டு மடங்கு தேவன் ஆசீர்வதிப்பதை பிசாசினாலும், மற்றொருவரலாரும் தடுக்க முடியவில்லை.

எனவே இன்றும் உலக அரசாங்கங்களை பார்த்து, அதிகாரங்களை பார்த்து, தீவிரவாத முறையில் மக்களை அடக்கியாள நினைக்கும் குழுக்களை பார்த்து, பணபலம் ஆள்பலம் என்பவற்றை பார்த்து அல்லது உறவினர்கள், நண்பர்கள், சொந்த குடும்பத்தினர், கணவன், மனைவி, பிள்ளைகள் என்று இவர்களைப் பார்த்து, நம் வாழ்வு கட்டுப்படுத்தப்படுகின்றது என்று எண்ணாமல், பரத்திலிருந்து கொடுக்கப்படாவிட்டால் இவர்கள் ஒருவராலும் நம் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது, அது நன்மையானாலும் தீமையானாலும் சரி. அதே நேரத்தில் தேவன் பரத்தில் இருந்து நமக்கு கொடுத்திருக்கின்ற அதிகாரத்தின் மூலம், மேற்சொன்ன உலக அரசாங்கம் முதல் மனைவி பிள்ளைகள் வரை, அவர்களை தேவ சித்தத்தின்படி நடத்துவது தேவன் நமக்கு கொடுத்த பணியாகும்.

அதே நேரத்தில் எந்த ஒரு நன்மையையும் தேவனிடத்தில் தேட வேண்டுமே ஒழிய மற்றவர்களிடத்தில் தேடக் கூடாது. ஏனெனில் நமக்கு நடக்கும் / கிடைக்கும் அனைத்தும் **சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது.** எனவே இக்கொடிய கொரோனா காலத்திலும், யோபுவின் வாழ்வை போல சீர்குலைந்து கிடைக்கும் நம் வாழ்க்கை, ஊழியம், சரீர சுகம், வேலை, மனித உறவுகள் என அனைத்தையும் பரலோகம் நமக்கு கொடுப்பதின் மூலமே அவற்றை சீர்படுத்துவோமாக. எனவே எதற்கும் கலங்காதீர்கள். யார் என்ன பேசினாலும் சத்துருவானவனே நமக்கு எதிர்த்து நின்றாலும், நாமோ ஆண்டவர் சொன்னபடியே

பரத்திலிருந்து அனுமதிக்கப்படாவிட்டால் நம்மீது யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்பதை உணர்ந்து கொள்வோமாக. தேவன் தாமே இதற்கான கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் தருவாராக, ஆமென், அல்லேலூயா.